1972 சனவரி 31]

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் பி.காம். வகுப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. பி.காம். படிக்க நிறைய மாணவர்கள் வருகிறார்கள். ஆகவே, அங்கே மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கான அடிப்படையான வசதியைப் பொறுத்து பல்கலைக் கழகம்தான் அனுமதி வழங்க வேண்டும். அவ்விதம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்திற்குச் சுட்டிக்காட்டினால் தக்க அனுமதி கிடைக்கும்.

நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

* 168 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்ற பி.டி. படித்தவர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொருள் ஆய்விலுள்ளது.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். நடுநிலைப்பள்ளிகளில் எல்லாம் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி போன்றவற்றில் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாகப் போடுவது பொருத்தமானது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வில் உள்ளது. பி.டி. படித்தவர்களைத்தான் எல்லாப் பள்ளிகளுக்கும் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று ஆணையிடுகின்ற நிலைமை இல்லை. பி.டி. படித்தவர்களாக தலைமை ஆசிரியர்கள் இருந்தால் பள்ளியின் நிர்வாகமும், மாணவர்களின் தரமும் உயரும், நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதால் அந்தக் கருத்து ஆராயப்பட்டு வருகிறது.

Polytechnics for women.

* 169 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Central grant has been received by the Women's Polytechnics in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் உள்ள எல்லா மகளிர் பல தொழில் கல்வி நிலையங்களுக்கும் மத்திய அரசு உதவி தொடரா செலவினத்தில் 75 சதவிகிதமும் தொடரும் செலவினத்தில் 50 சதவிகிதமும் செலவினத்தில் முதல் ஐந்து வருடங்களுக்கு கிடைக்கின்றது.

THIRU N. DENNIS : May I know whether such polytechnics would be opened in other places in this State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேலும் பல தொழில் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்படுவதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இப்பொழுது கூட கிட்டத்தட்ட 33, 34 பாலிடெக்னிக்கள் இருக்கின்றன. அவற்றிலே போதுமான அளவுக்கு மாணவர்கள் வராத அளவுக்கு இருக்கிறது. அந்த கோர்ஸ்களையும் மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்புகளும் இருக்கின்றன. இப்பொழுது 3 இடங்களில் பெண்களுக்கான தொழிற் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. மேலும் தேவைப்படுமானல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து ஆராய பரிசிலனை செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இப்பொழுதே பல பாலிடெக்னிக்குகளில் படித்த மாணவர்களில் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு எல்லாம் வேலைகொடுக்கக்கூடிய திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேதான் பாலிடெக்னிக்குகளில் படித்த மாணவர்களுக்கு ஓரளவுக்கு வேலையில்லாத நிலைமை இருந்தது. அதற்குக் காரணம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுவது குறிப்பிட்ட காலத்திலே தொடங்கப் படாததுதான். அதன் காரணமாக வேலைவாய்ப்புகள் நின்றிருந்தன. இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கான வேவாய்ப்புகள் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது எஞ்சினியரிங், பாலிடெக்னிக் படித்த மாணவர்களுக்குப் பெரும்பாலும் வேலை கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு என்று அப்ரன்டீஸ்ஷிப் கொடுக்கப்பட்ட போதுகூட—நான் குத்து மதிப்பாகச் சொல்கிறேன்—900 பேர்களுக்கு கொடுத்தும், 200, 300 இடங்களுக்குத்தான் மாணவர்கள் வந்தார்கள். மற்றவர்கள் வரவில்லை. பல் வேறு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் வேலை வாய்ப்பு கொஞ்சம் குறைந்த நிலை இருந்தது. இப்பொழுது வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : படிப்பு முறையையும் பாடத் திட்டத்தையும் மாற்றியமைக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன என்ன முறையில் மாற்றப்போகிறார்கள்? இப்பொழுது இருக்கிற முறையிலே உள்ள சங்கடங்கள் என்ன என்பதை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சிவில் எஞ்சினியரிங், மெக்கானிக்கல் எஞ்சினியரிங், எலக்ட்ரிகல் எஞ்சினியரிங் என்று பல முறைகள் நாம் வைத்திருந்தாலும், இப்பொழுது அதிகமாக எலக்ட்ரானிக்ஸ் என்ற

சப்ஜெக்ட்டுக்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. அண்மைக்காலத்தில் ரேடியோ, டெலிவிஷன் இவைகள் எல்லாம் பெருகி வருகின்ற நிலைமையிலே அவற்றிற்கு ஏற்றவகையிலே மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. மேலும் கெமிக்கல்ஸ்க்கும் அதிகமான வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்பொழுது வாய்ப்பு எது எதற்கு இருக்கிறதோ அவற்றிற்கேற்ற முறையிலே திருத்தியமைப்பதற்கான முயற்சிகளில் தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

பள்ளிகளின் ஆய்வு முறை

*170 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாவட்ட கல்வி அதிகாரிகள், துணை ஆய்வாளர்கள், பள்ளிகளைப் பார்வையிடும் முறையைத் தீவிரப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present there is only one District Educational Officer for each district to inspect the schools. He is not able to do justice to all subjects. If District Educational Officers qualified in science subjects and arts subjects are appointed, they will be doing sufficient work. May I know whether the Government will take this point into consideration and appoint subjectwar District Educational Officers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று, பொருளைப் பொறுத்து, அதாவது சப்ஜெக்ட்டைப் பொறுத்து டி.இ.ஓ. அமைப்பது என்பது இப்பொழுது நடைபெறக்கூடியதாக இருக்காது. இப்பொழுதே அதிகமான அளவுக்கு மேற்பார்வையிடுகின்ற அளவுக்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது. அந்த வகையிலேதான் தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு டி.இ.ஓ. அதிகமாக நியமிக்க செயற்குறிப்பு இருக்கிறது. அவர்களுடைய எண்ணிக்கை பெருகிய அளவில் அதிகமான அளவுக்கு மாவட்டக் கல்வி அதிகாரிகளை நியமிக்கின்ற நிலைமை வருகிறபோது பணிகளைப் பிரித்துத் தரலாம். இப்பொழுது ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு டி.இ.ஓ. என்ற முறையிலேதான் நியமிக்கப்பட்டு வருகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : கல்வி மாவட்டத்திற்கு ஒரு டி.இ.ஓ. நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அவர்கள் அபிஷியல் ஒர்க்கர்ஸ்ஸைக் கவனித்துவர வேண்டியிருக்கிறது. பார்வையிடுவதற்கு அவர்களால் முடியாது, எனவே பார்வையிடுவதற்காக தனியாக ஒரு டி.இ.ஓ. நியமிப்பதற்கு அரசு முன்வருமா?